# திருக்குறளில் வரையறுக்கப்பட்ட வேளாண்மைச் செய்திகள்

**க. நிஷா[1] & முனைவர் இரா. சுப்ரமணி[2]**

**[1]முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்**

**[2] இணைப்பேராசிரியர்**

**தமிழாய்வுத் துறை , அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி)**

**கரூர் -05.**

5

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழர் வாழ்க்கை பண்நெடுங்கால சிறப்பு வாய்ந்தது என நாம் போற்றுதற்குக் காரணம் இலக்கியங்களே. அத்தகைய இலக்கியங்கள் இம்மண்ணில் பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளன. அத்தகைய சிறப்புவாய்ந்த அற இலக்கியத்தில் ஒரு பிரிவான திருக்குறள் உலகிற்கு தேவையான அனைத்து அறங்களையும் இரண்டே அடிகளில் இந்த உலகளந்து கூறியுள்ளார் வள்ளுவர். அன்றாட வாழ்வில் அடிப்படை தேவைகளுள் ஒன்றான உணவு நமக்கு எளிதாகக் கிடைத்துவிடுகிறது என்று எண்ணுகிறோம். ஆனால் அந்த உணவு உற்பத்திக்குப் பின்னால் இருக்கும் வேளாண் செய்திகள் அதிகம் அறியப்படாதவையே. திருக்குறளில் வேளாண்மை செய்திகளைப் பற்றி இக்கட்டுரையில் ஆராயப்பட உள்ளன.

**முன்னுரை**

தமிழ்மறை எனப் போற்றப்படும் திருக்குறள் இவ்வுலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் பொதுவாக அமைகின்ற அறநூலாகும். திருவள்ளுவர் அறக்கருத்துக்களைக் கூற வந்த ஆசான். முப்பால் மணம் வீசும் திருக்குறள் வேளாண்மையின் இன்றியமையாமையைக் குறித்து எடுத்தியம்புகின்றார். அடிப்படைத் தேவைகளுள் ஒன்றான உணவையும் உணவின் உற்பத்தித்திறன் பற்றியும் நாம் இன்று அறிந்துள்ளதை வள்ளுவர் அன்றே தெளிவாக முன்மொழிந்துள்ளார். இன்று வேளாண்மைத் துறையில் மாபெரும் முன்னேற்றம் காணப்படுகின்றது. புதுமைக் கருவிகள், புதுமைக் கண்டுபிடிப்புகள் , புதுமைக் கருவிகள் , பல்துறைஆராய்ச்சிகள் முதலியன இன்றைய சாதனைகள் என்றாலும் உழவியல் ஒற்றுமை அன்றும் இன்றும் ஒன்றாக விளங்கக் காண்கிறோம். தமிழினம் மேற்கொண்ட வேளாண்மை முறைகளை திருக்குறள் வழி ஆராய முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கலைச்சொற்கள்**

**1.சூழல் -அருகாமையில் இருக்கும் இடம்**

**2. உழுவார் - உழுது விளைப்பர்**

**3. ஆற்றாது -அழுத கண்ணீர்**

**வேளாண்மையின் மகத்துவம்**

அன்றாடம் வாழ்வில் உணவு இன்றியமையாதது. அந்த உணவைப் பெறுவதற்கு செய்யும் வேலைப்பழுவும் நுட்பமும் அதிகம். வேளாண்மையின் மகத்துவத்தை நாம் கண்டிப்பாக அறிய முற்படவேண்டும்.

**சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை.** (குறள் : 1031)

உழவுத் தொழிலில் இருக்கும் கடின உழைப்பைப் பார்த்து வேறுவேறு தொழில்களுக்கு சென்றுவிடுகின்றனர். ஆனால் , இவ்வுலகம் ஏருடையவரையே உணவுக்கு எதிர்பார்க்க நேரிடுகிறது. இவ்வுலகில் பல தொழில்கள் இருந்தாலும் , உழவுத் தொழில் தான் சிறந்த தொழிலாகும் என்று கூறுகிறார்.

**வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது**
**இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி.** (தொல்.பொருள்.மரபு -81)

வேளாண் மாந்தர்கள் பலவகைப்பட்ட தொழில்களை செய்தாலும் பெரும்பாலும் வேளாண் தொழிலையே செய்கின்றனர். அதனை சிறப்பித்துக் கூறுவது மரபாகும். வேளாண்மை செய்யும் மனமுடையோர் பிறர்க்காகவும் , தமக்காகவும் உழூது விளைப்பர் என்று கூறுகிறார்.

**உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது**
**எழுவாரை எல்லாம் பொறுத்து.** (குறள் : 1032)

உழவுத்தொழிலைச் செய்யாது பிற தொழில் செய்ய செய்ய செல்லும் அனைவரையும் உழவர்களே தாங்குவதால் அவர்களே இந்த உலகில் உள்ள அனைவருக்கும் அச்சாணி போன்றவர் ஆவார்.

**உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்**
**தொழுதுண்டு பின்செல் பவர்.** (குறள் : 1033)

இந்த உலகில் உழவுத் தொழில் செய்து வாழ்பவர் யாருடைய எதிர்பார்ப்பின்றியும் தனிமனிதனாக வாழ்பவராக உள்ளார். ஆனால் உழவுத்தொழில் செய்யாதவர் உழவர்களை எதிர்பார்க்கும் பொருட்டே வாழவேண்டியுள்ளது.

**உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்**
**விட்டேமென் பார்க்கும் நிலை.** (குறள் : 1036)

உழவர்கள் உழவுத் தொழிலை கைவிட்டுவிட்டால் யாவரும் விரும்பும் உணவை

உண்ண முடியாது. பொன், மண், ஆசை என்று அனைத்தையும் துறந்த துறவிகளுக்கு கூட உணவு கிடைக்காமல் போய்விடும். இவ்வுலகில் எந்த தொழிலை விட்டாலும் அதில் அதிகம் பாதிப்பேற்படாது. ஆனால் , உழவுத்தொழிலை கைவிட்டால் நாடே முடங்கிப்போய்விடும்.

**வேளாண்மை செய்யும் முறை**

நிலத்தின் தன்மைக்கேற்ப வன்புலம் , மென்புலம், புன்புலம், களர்நிலம் என பல வகைகளாகப் பிரித்துள்ளனர். மண்ணின் தன்மையை நன்கு அறிந்து விவசாயம் செய்தால் தான் உணவு உற்பத்;தி பெருகும்.

**தொடிப்புழுதி கஃசோ உணக்கின் பிடித்ததுஎருவும்**
**வேண்டாது சாலப் படும் (குறள் : 1037)**

நிலத்தை உழுபவன் ஒரு பலம் அளவுள்ள புழுதி கால் பலம் அளவு ஆகும்படி மண்ணைக் காயவிட்டால் அந்நிலப் பயிருக்கு ஒரு பிடி எருவுகூட இடவேண்டாம். பயிர் செழிப்பாக வளரும் என்று கூறுகிறார்.

**செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து**
**இல்லாளின் ஊடி விடும். (குறள் : 1039)**

நிலத்திற்கு உரியவன் நாளும் நிலத்தை சென்று பார்க்காமல் இருந்தால் அந்நிலம் செல்லாமையால் புலந்த இல்லாளைப் போல் புலந்துவிடும். உழுது பயிரிட்டு தனக்கு பயன்தந்த வேளாண்நிலத்தை எப்போதும் மறவாமல் நினைத்துக் கொண்டு இருப்பான்.

**வேளாண் விஞ்ஞானி**

**ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்**
**நீரினும் நன்று அதன் காப்பு (குறள் : 1038)**

ஏர் உழுவதைவிட பயிருக்கு எரு போடுதல் நல்லது. அதனுடன் விளைந்த பயிர்களில் உள்ள களையை எடுத்தல் வேண்டும். அந்த பயிருக்கு காவல் இருந்து நீர்விட்டு கவனித்துக் கொண்டால் செழிப்பான பயிர்கள் வளரும்.

**நன் புலத்து வை அடக்கி நாளும் ஏர் போற்றி**
**புன் புலத்தைச் செய்து எருப் போற்றிய பின் நன் புலக்கண்**
**பண் கலப்பை பாற்படுப்பான் உழவன் என்பவே**
**நுண் கலப்பை நூல் ஓதுவார். (சிறுபஞ்ச.58)**

நல்ல உழவன் தன் நிலத்தில் இருந்து கிடைக்கும் அனைத்து வகையான

தாவரங்களையும் சேர்த்துவைப்பான். நாள்தோறும் உழுது ஏரைப் போற்றுவான். களர் நிலத்தையும் உழுது பன்படுத்தி புன்செய் நிலமாக மாற்றுவான். பயிர்கள் நன்கு செழிப்புடன் வளர்வதற்கு நிலத்தில் எரு போடுவான். கலப்பையால் நிலத்தைப் பண்படுத்துவான் இதுவே சிறந்த உழவனுக்கு எடுத்துக்காட்டாகும் என்று கூறுகின்றார்.

**தொகுப்புரை**

ஒரு நாட்டின் முதுகெலும்பாக வேளாண்மை கருதப்படுகிறது. வேளாண்மை சங்க காலம் தொட்டு இன்று வரை அதன் பரிமாணங்கள் மாற்றமடைந்து வளர்ச்சி பெற்றுக் கொண்டே இருக்கிறது. வேளாண்மை மனிதன் உயிரைப் பாதுகாக்கும் மற்றும் செழிப்பை உருவாக்கும். உணவுத் தானியம் பொருளாதார வளர்ச்சிக்கும் வேளாண்மை உதவுகின்றது. உலகில் உள்ள உயிர்களுக்கு எல்லாம் அன்னையாக உணவு இருக்கின்றது. அன்றைய நுட்பமும் இயற்கை விவசாயமும் இன்றைய விவசாய முறையில் குறைந்து கொண்டே வருகின்றது.

இயற்கை விவசாயத்தை விட செயற்கை விவசாயமே இன்று அதிகம் உள்ளது. தாவரங்களில் மீது செயற்கை மருந்துகளைத் தெளிப்பதன் மூலம் பல நோய்கள் வருகின்றது. இந்த தலைமுறையில் உள்ள இளைஞர்கள் இயற்கை விவசாயத்தை அதிகம் பின்பற்றினால் நோய்களின் தாக்குதலை குறைக்கலாம்.

ஒரு சிற்பி கருங்கல்லை செதுக்கி சிலையாக்குவதைப் போல வள்ளுவர் தன் வார்த்தைகளை செதுக்கி சிலையாக்கி மக்களின் மனதில் பதியும் படி அன்றே வேளாண்மையைப் பற்றிய கருத்துகள் மிக அழகாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**துணைநூற்பட்டியல்**

1. திருக்குறள் - வ.சுப மாடணிக்கனார்
சாரதா பதிப்பகம்,3,ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை -14.
2. சுப்ரமணியன், ச.வே - தொல்காப்பியம், மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை -108.
3. முனைவர் தமிழண்ணல் - வர்த்தமானன் பதிப்பகம், 21,
4. முனைவர் அண்ணாமலை சு.ப. இராமகிருஷ்ணாதெரு, தியாகராய நகர், சென்னை -17.